# பரீட்சகரின் அறிக்கை

## AA1 பரீட்சை – 2018 சனவரி

## (AA15) வியாபாரத் தொழிற்பாடுகளும் முகாமைத்துவமும்

---

பெரும்பாலும் பாடத்தின் சகல பரப்புகளும் உள்ளடக்கப்பட்டிருக்கின்ற AA1 மட்டத்தின் ‘‘வியாபாரத் தொழிற்பாடுகளும் முகாமைத்துவமும்’’ வினாப்பத்திரத்தின் நோக்கம், பாடப் பரப்புகள் மீதான பரீட்சார்த்திகளின் ஒட்டுமொத்த அறிவையும் விளங்கிக்கொண்ட தன்மையினையும் பரீட்சிப்பதாக இருந்தது. பரீட்சகரின் அறிக்கையினுடைய பிரதான நோக்கம், எதிர்காலப் பரீட்சைகளில் பரீட்சார்த்திகளின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்கு உதவும் வகையில் பரீட்சார்த்திகளால் குறைவான புள்ளிகள் பெறப்பட்ட பாடப் பரப்புகள் மீது கவனத்தைச் செலுத்துவதாகும்.

பெரும்பாலான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தமையை இங்கு காணக்கூடியதாக இருந்தது. வேறு வகையில் கூறுவதாயின் பின்வரும் குறைபாடுகள் காரணமாக சில பரீட்சார்த்திகள் வினாவை விளங்கிக்கொள்ளவில்லை என்பதுடன் எதிர்பார்க்கப்பட்ட விடைகளை அளிக்கவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது:

### <u>பகுதி A</u>

### வினா இல. 01

பெரும்பாலும் வியாபாரத் தொழிற்பாடுகளும் முகாமைத்துவமும் பாடத்தின் சகல பரப்புகளும் இப்பகுதியில் உள்ளடக்கப்பட்டிருந்தன. பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் இப்பகுதிக்கு விடையளித்திருந்தனர். மொத்தமாகவுள்ள 100 புள்ளிகளில் 40 புள்ளிகள் இப்பகுதிக்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் பல பரீட்சார்த்திகள் உயர் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். ஒட்டுமொத்த பாடப் பரப்புகளிலும் தெளிந்த அறிவைக் கொண்டிருப்பதன் மூலம் பகுதி A இற்கு இலகுவாக விடையளித்து உயர் புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் அது சித்திப் புள்ளியை தாம் நெருங்குவதை இலகுபடுத்தும் என்பதையும் பரீட்சார்த்திகள் கவனத்திற்கொள்வது முக்கியமாகும். அதிகளவான பரீட்சார்த்திகள் வினா இல. **1.16, 1.17** மற்றும் **1.20** ஆகியவற்றுக்கு வெற்றிகரமான முறையில் விடையளித்திருக்கவில்லை. அவை பற்றிய அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன:

**1.16** பெரும்பாலான பரீட்சார்த்திகள் அலுவலக தன்னியக்க முறைமை மற்றும் கொடுக்கல் வாங்கல் செயற்பாட்டு முறைமை ஆகியவற்றின் பொருள் விளக்கங்களை இனங்கண்டிருக்க வில்லை என்பதால் அவர்கள் சரியான விடையினைத் தெரிவுசெய்திருக்கவில்லை. தகவல் முகாமைத்துவத்தில் உள்ள தகவல் முறைமைகளின் வகைகள் பற்றிய தெளிவானதும் உறுதியானதுமான அறிவினை விருத்தி செய்வது முக்கியமானதாகும்.

**1.17** அதிகளவான பரீட்சார்த்திகளிடம் வெளிப்படையான அறிவு மற்றும் மறைமுக அறிவு என்பன பற்றிய விளக்கங்கள் காணப்படாததன் காரணமாக, அவர்களால் சரியான விடையைத் தெரிவுசெய்ய முடியவில்லை. தனிநபர்களின் அனுபவங்களின் அடிப்படையில் அவர்களில் பதிக்கப்படும் அறிவு மறைமுக அறிவு என்பதை பரீட்சார்த்திகள் கவனத்திற்கொள்ளுதல் வேண்டும்.

**1.20** இங்கு பயனுறுதிமிக்க சந்தைத் துண்டமொன்றின் பண்பியல்புகள் பற்றிய சரியான புரிந்துணர்வை அளவிட எதிர்பார்க்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகளிடம் அவை பற்றிய புரிந்துணர்வு காணப்படாததுடன் அவர்கள் தவறான விடையினைத் தெரிவுசெய்துமிருந்தனர். 'வேறுபடுத்தக்கூடியது' என்பது பயனுறுதிமிக்க சந்தைத் துண்டமொன்றின் பண்பியல்பு என்பதைப் பரீட்சார்த்திகள் கவனத்திற்கொள்ளுதல் வேண்டும்.

எனவே, பரீட்சார்த்திகள் பாடப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படியான வியாபாரத் தொழிற்பாடுகளும் முகாமைத்துவமும் பற்றிய அடிப்படை எண்ணக்கருக்கள் மீதான தங்களது அறிவினை மேம்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். மேலுள்ள வினாக்களைத் தவிர ஏனைய வினாக்களுக்கு அதிகளவான பரீட்சார்த்திகள் நன்றாக விடை அளித்திருந்தனர். வினா இல. 01 இற்கான ஒட்டுமொத்த செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தது.

## பகுதி B

இப்பகுதி, கட்டாயமாக விடையளிக்க வேண்டிய 04 வினாக்களைக் கொண்டிருந்ததுடன் அவை ஒவ்வொன்றும் 10 புள்ளிகளையும் கொண்டிருந்தன.

## வினா இல. 02

இவ்வினாவின் பகுதி (a) ஆனது வரையறுக்கப்பட்ட தனியார் மற்றும் பொதுக் கம்பனிகளை அடிப்படையாகக் கொண்டதாகவும் பகுதி (b) ஆனது தொடர்பாடலை அடிப்படையாகக் கொண்டதாகவும் அமைக்கப்பட்டிருந்தன.

### பகுதி (a)

இங்கு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகளுக்கும் வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனிகளுக்கும் இடையிலான வேறுபாடுகள் நான்கினைக் (04) கூறுமாறு தேவைப்படுத்தப்பட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் பகுதி (a) இற்கு வெற்றிகரமாக விடையளித்து உயர் புள்ளிகளைப் பெற்றிருந்தனர். வினாவுக்கு வெற்றிகரமாக விடையளிக்காத சில பரீட்சார்த்திகள் கம்பனிகளுக்கும் பங்குடமைக்கும் இடையிலான வேறுபாடுகளை எழுதியிருந்தனர். சிலர், வேறுபாடுகள் பற்றிக் கவனம் செலுத்தாது வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகளினதும் வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனிகளினதும் பண்பியல்புகளைக் குறிப்பிட்டிருந்தனர்.

### பகுதி (b)

இங்கு பகுதி (i) இல், கம்பனிகளுக்கு பயனுறுதிமிக்க தொடர்பாடல் ஏன் முக்கியமானது என்பதற்கான காரணங்கள் நான்கினைக் (04) கூறுமாறும் பகுதி (ii) இல் உள்ளகத் தொடர்பாடல் கருவிகள் இரண்டினைக் கூறுமாறும் கேட்கப்பட்டிருந்தது. வியாபார நிறுவனங்களுக்கு தொடர்பாடல் என்பது ஒரு ஆதரவுச் சேவையாக இருப்பதால் தொடர்பாடல் பற்றிய செய்முறை அறிவு காரணமாக இவ்வினா மிகவும் இலகுவானதாக இருந்ததால் அதிகளவானவர்களால் வெற்றிகரமாக விடையளித்திருந்ததுடன் இவ்வினாவுக்கு விடையளித்தவர்களில் பெரும்பாலானவர்கள் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். கம்பனிகளுக்கு பயனுறுதிமிக்க தொடர்பாடல் ஏன் முக்கியமானது என்பதற்கான காரணங்களைக் கூறுமாறு வினாவில் கேட்கப்பட்டிருந்தபோதிலும் சில பரீட்சார்த்திகள் விடையினை விளக்கமாக விபரித்து எழுதியிருந்தனர். எனவே, பரீட்சார்த்திகள் வினாவில் என்ன கேட்கப்பட்டுள்ளது என்பதை விளங்கிக்கொள்வது முக்கியமானது என்பதுடன் இது பரீட்சையின் போதான நேர முகாமைத்துவத்திற்கும் உதவியாக அமையும்.

## வினா இல. 03

இங்கு, வியாபார நிறுவனமொன்றில் காணப்படுகின்ற சேவைகள் மற்றும் தொக்கு முகாமைத்துவம் பற்றிப் பரீட்சார்த்திகள் கொண்டுள்ள அறிவைப் பரீட்சிக்க எதிர்பார்க்கப்பட்டது.

### பகுதி (a)

சேவைகளின் பண்பியல்புகள் நான்கினைக் (04) கூறுமாறு இங்கு கேட்கப்பட்டிருந்தது. குறிப்பிடத்தக்க அளவிலான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு நன்றாக விடையளித்து முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். சிறியளவு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் சேவைகளின் பண்பியல்புகளை எழுதுவதற்குப் பதிலாக பொருட்களின் பண்பியல்புகளை எழுதியிருந்தனர்.

### பகுதி - B

நிறுவனம் ஒன்றிற்கான தொக்கு முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தை விபரிக்குமாறு இங்கு கோரப்பட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகளிடம் தொக்கு முகாமைத்துவம் பற்றிய விளக்கம் காணப்படாதிருந்ததுடன் அவர்கள் தொக்கு முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தை விபரிப்பதற்குப் பதிலாக தொக்கு முகாமைத்துவத்தின் நுட்பங்களை விபரித்திருந்தனர். மிகச் சிலரே சரியான விடையினை அளித்திருந்தனர். இந்த நிலைமையானது நிறுவனம் ஒன்றிற்கான தொக்கு முகாமைத்துவம் பற்றிய தங்களது அறிவினைப் பரீட்சார்த்திகள் மேம்படுத்த வேண்டும் என்பதையே காட்டுகிறது.

## வினா இல. 04

இவ்வினாவின் பகுதி (a) ஆனது, நிறுவனம் ஒன்றின் வெகுமதி முகாமைத்துவத்தை அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன் பகுதி (b) ஆனது மனக்குறைகளைக் கையாளும் செயன்முறையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு உரியவாறு விடையளித்திருக்கவில்லை. இவ்வினாவுக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை மிதமான தரத்தில் காணப்பட்டது.

### பகுதி (a)

ஊழியர் ஒருவரால் பெற்றுக்கொள்ளப்படும் வெகுமதிகளைத் தீர்மானிக்கின்ற இவ்விரண்டு உள்ளகக் காரணிகளையும் வெளிவாரிக் காரணிகளையும் குறிப்பிடுமாறு இங்கு கோரப்பட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள், ஊழியர் ஒருவரால் பெற்றுக்கொள்ளப்படும் வெகுமதிகளைத் தீர்மானிக்கின்ற காரணிகள் பற்றி விளங்கிக்கொள்ளவில்லை. குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் ஊழியர் ஒருவரால் பெற்றுக்கொள்ளப்படும் வெகுமதிகளைத் தீர்மானிக்கின்ற உள்ளக மற்றும் வெளிவாரிக் காரணிகளைக் குறிப்பிடுவதற்குப் பதிலாக உள்ளக மற்றும் வெளிவாரியான சூழற் காரணிகளைக் குறிப்பிட்டிருந்ததையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

### பகுதி (b)

இப்பகுதி, மனக்குறைகளைக் கையாளும் செயன்முறை ஒன்றின் படிநிலைகளை அடிப்படையாகக் கொண்டதாகும். குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் மனக்குறைகளைக் கையாளும் செயன்முறை ஒன்றின் படிநிலைகளை விபரித்திருக்கவில்லை என்பதுடன் சிலர் சில படிநிலைகளை மாத்திரம் அல்லது செயன்முறையின் படிநிலைகளின் ஒழுங்குமுறைகளை மாற்றி விபரித்திருந்தனர். எனவே, இதன் விளைவாக அதிகளவான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு குறைந்தளவு புள்ளிகளையே பெற்றிருந்தனர். அதிகளவானவர்கள் தங்களது பொது அறிவைப் பயன்படுத்தி தெளிவற்ற விடைகளை எழுதியிருந்தனர். எனவே, பரீட்சார்த்திகள் பாடப் புத்தகத்தினைப் படித்து ஆழமான அறினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

## வினா இல. 05

இங்கு வியாபார நடவடிக்கைகளில் சந்தைப்படுத்தலின் வகிபாகம் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சிக்க எதிர்பார்க்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் மொத்தமாகவுள்ள 10 புள்ளிகளில் பெரும்பாலானவற்றைப் பெற்றிருந்தனர். இவ்வினாவுக்கான ஒட்டுமொத்த செயலாற்றுகை திருப்திகரமானதாக இருந்தது.

**பகுதி (a)**

இங்கு, சந்தைப்படுத்தல் கலவையின் 4P’s இனை விபரிக்குமாறு கோரப்பட்டிருந்தது. குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்காக சந்தைப்படுத்தல் கலவையின் 4P’s இனை வெறுமனே எழுதியிருந்தபோதிலும் அவர்கள் அவற்றை விபரித்திருக்கவில்லை.

**பகுதி (b)**

இலாப நோக்கற்ற நிறுவனங்களில் சந்தைப்படுத்தலைப் பயன்படுத்துவதன் நன்மைகள் இரண்டினைக் கூறுமாறு இங்கு கேட்கப்பட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் ‘‘இலாப நோக்கற்ற’’ என்ற பதத்தினைச் சரியாக விளங்கிக்கொள்ளத் தவறியதன் காரணமாக சரியாக விடையளித்திருக்க வில்லை என்பதுடன் அவர்கள் குறைந்தளவான புள்ளிகளையே பெற்றிருந்தனர். பல பரீட்சார்த்திகள் நிறுவனம் ஒன்றிற்கு சந்தைப்படுத்தலைப் பயன்படுத்துவதன் நன்மைகளைப் பொதுவாக எழுதியிருந்தனர்.

### <u>பகுதி C</u>

இப்பகுதி 20 புள்ளிகளுக்கான ஒரு கட்டாய வினாவைக் கொண்டிருந்தது.

## வினா இல. 06

இது **பெஷன் கார்மென்ட்ஸ் (பிரை.) லிமிட்.** தொடர்பான விடய ஆய்வு அடிப்படையிலமைந்த ஒரு வினாவாகும். இங்கு வியாபாரச் சூழல், சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் மற்றும் மனித வள முகாமைத்துவம் ஆகியன பற்றிய அறிவைப் பரீட்சிக்க எதிர்பார்க்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் விடையளிப்பு மட்டமும் திருப்திகரமானதாக இருந்தது.

**பகுதி (a)**

பெரும்பாலான பரீட்சார்த்திகள் **பெஷன் கார்மென்ட்ஸ் (பிரை.) லிமிட்.** இற்கு ஏற்புடையதான வாய்ப்புகளையும் அச்சுறுத்தல்களையும் அடையாளங் கண்டிருந்ததுடன் உயர் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். ஆயினும், சில பரீட்சார்த்திகள் வியாபார நிறுவனம் ஒன்று எதிர்கொள்கின்ற வாய்ப்புகளையும் அச்சுறுத்தல்களையும் வெறுமனே பொதுவான கண்ணோட்டத்தில் எழுதியிருந்தனர். இவ்வகையான வினாவுக்கு விடையளிக்கும்போது, பரீட்சார்த்திகள் தரப்பட்ட விவரணத்துடன் விடைகளைத் தொடர்புபடுத்துதல் வேண்டும்.

**பகுதி (b)**

இங்கு, **பெஷன் கார்மென்ட்ஸ் (பிரை.) லிமிட்.** இன் சூழல் பற்றிய PEST பகுப்பாய்வு அறிவைப் பரீட்சிக்க எதிர்பார்க்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு திருப்திகரமான பதில்களை வழங்கியிருக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் தரப்பட்ட விவரணத்தை ஒதுக்கிவிட்டு PEST பகுப்பாய்வை விபரித்திருந்தனர். இவ்வகை வினாக்களின் ஊடாக, நடைமுறை நிலைமைகளுக்கு முகாமைத்துவ எண்ணக்கருக்களை பிரயோகிப்பதற்கான பரீட்சார்த்திகளின் ஆற்றலைப் பரீட்சிக்க எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கிணங்க, தரப்படும் வினாக்களை சரியான விளக்கத்துடன் வாசிப்பதும் நடைமுறை ரீதியில் கோட்பாட்டு ரீதியான அறிவினைப் பிரயோகிப்பதும் அவசியமானதாகும்.

**பகுதி (c)**

செயலாற்றுகை மதிப்பீட்டுச் செயன்முறையை வலுப்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட வேண்டிய படிமுறைகள் பற்றிய அறிவு இங்கு பரீட்சிக்கப்பட்டிருந்தது. குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்ததன் மூலம் உயர் புள்ளிகளைப் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் செயலாற்றுகை மதிப்பீட்டுச் செயன்முறையின் ஒழுங்கினை குழப்பி எழுதியிருந்தனர்.

**பகுதி (d)**

இப்பகுதி பொருள் சந்தைப்படுத்தலை அடிப்படையாகக் கொண்டது. குறிப்பிட்ட சில பரீட்சார்த்திகள் **பெஷன் கார்மென்ட்ஸ் (பிரை.) லிமிட்.** பற்றித் தரப்பட்ட விவரணத்தினைத் தொடர்புபடுத்தாது, பொதுவான முறையில் வாடிக்கையாளர்களை இலக்கு வைப்பதற்கு பொருள் நிலைப்படுத்தல் ஏன் முக்கியமானது என்பதை விபரித்திருந்தனர். பல பரீட்சார்த்திகள் ‘‘பொருள் நிலைப்படுத்தல்’’ என்பதால் கருதப்படுவது யாது என்பது பற்றிய விளக்கம் இன்றி, சம்பந்தமற்ற விடைகளை எழுதியிருந்தனர். எனவே பரீட்சார்த்திகள் வியாபாரத் தொழிற்பாடுகளுடன் தொடர்புடைய பொருள் நிலைப்படுத்தல் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட எண்ணக்கருக்கள் தொடர்பான கோட்பாட்டு ரீதியானதும் நடைமுறை ரீதியானதுமான விடயங்கள் மீது கவனம் செலுத்துதல் வேண்டும்.

பரீட்சார்த்திகள் கடந்தகால வினாப்பத்திரங்களில் உள்ள இதே மாதிரியான வினாக்களைச் செய்து பார்த்து பயிற்சி எடுப்பார்களேயானால், இவ்வகையான விவரண அடிப்படையிலான வினாக்களுக்கு உயர் புள்ளிகளை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

- - -

**பரீட்சார்த்திகளின் விளங்கிக்கொள்ளும் மட்டத்தினை விருத்திசெய்வதற்கு கவனத்திற்கொள்ளவேண்டிய பொதுவான விடயங்கள்**

**1.** வினாப்பத்திரத்தைக் கையில் எடுத்ததும் தரப்பட்ட அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்கவும். வினாப்பத்திரத்திலேயே விடை எழுத வேண்டாம்.

**2.** இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகத்தினால் வெளியிடப்பட்ட சுய கற்றல் புத்தகம் முழுமையான பாடத்திட்டத்தை உள்ளடக்கி சிறந்த வழிகாட்டல்களை வழங்கியிருப்பதால் அதிலிருந்து உச்சபட்ச பயனைப் பெற்றுக்கொள்க.

**3.** வினாவை பல தடவைகள் வாசித்து வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடையளிக்கவும். வினாவில் நேரடியான மற்றும் துல்லியமானதொரு விடை எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில் தேவையற்ற விபரிப்புகளையும் விபரங்களையும் எழுத வேண்டாம்.

**4.** பரீட்சை எழுதும்போது நேர முகாமைத்துவம் முக்கியமானது.

**5.** வரைவிலக்கணங்களுடன்கூடிய **செயல் வினைச் சொல் நிரல்** இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்களைத் தவிர ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **செயல் வினைச் சொல்லைக்** கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள், செயல் வினைச் சொல் நிரலில் தரப்பட்ட வினைச் சொல் **வரைவிலக்கணத்தை** அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

**6.** விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன்னர், வினா இலக்கங்கள் மற்றும் உங்களது சுட்டிலக்கம் என்பன சரியாக எழுதப்பட்டுள்ளதா என்பதைப் பரீட்சிக்கவும்.

**7.** வினாப்பத்திரத்திலேயே விடைகளை எழுதி அதனை விடைத்தாளுடன் இணைத்து அனுப்ப வேண்டாம்.

**8.** கடந்தகால வினாப்பத்திரங்களுக்கு விடையளித்துப் பயிற்சி பெறுவதன் மூலம் நீங்கள் பாடம் சம்பந்தமான அறிவினை மேம்படுத்திக்கொள்ள முடியும் என்பதுடன் விடைகளை எழுதுவதற்கான ஆற்றலும் கிடைக்கும்.

**9.** அறிவினை நிகழ்நிலைப்படுத்திக்கொள்வதற்காக அண்மையில் பிரசுரிக்கப்பட்ட சஞ்சிகைகள், கையேடுகள், பாடப்புத்தகங்கள் போன்றவற்றைப் பயன்படுத்துக.

**10.** வினாக்களுக்கு விடையளிக்காது இருப்பதற்கு முயற்சிக்க வேண்டாம். இப்பழக்கம் குறைந்த புள்ளிகளையே பெறுவதற்கு வழிவகுக்கும்.

**11.** நல்ல முன்னாயத்தத்துடன் பெரும்பாலும் பரீட்சையில் சித்தியடையும் நம்பிக்கையுடனும் பரீட்சைக்குத் தோற்றவும்.

- * * * -